

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | சனவரி 20, 2022 | புரட்சி 21 | முழக்கம் 01 | விலை: ரூ.3.00

## சமூக நீதித் தத்துவத்தின் முன் இந்துத்துவா அரசியல் தோற்கிறது

# உ.பி. தேர்தல் களம்: நடப்பது என்ன?

***உ.பி. தேர்தல் களத்தில் இந்துத்துவா அரசியலை ஆளும் பா.ஜ.க.வும் எதிர்கட்சிகளும் பின்னுக்குத் தள்ளி விட்டு 'சமூகநீதி' அரசியலையே முன்னிறுத்தி வருகின்றன.***

இந்துத்துவா அரசியலின் 'சோதனைக் களமாக' செயல்பட்டது உ.பி.யில் ஆதித்யநாத் தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி. ஆனால் படுதோல்வியை சந்தித்து வருகிறது -'இந்துத்துவா' அரசியல். இந்துக்களை மதத்தின் அடிப்படையில் ஓரணியில் திரட்ட இஸ்லாமியர்களை எதிரிகளாகக் கட்டமைக்க வேண்டும் என்பதே ஆர்.எஸ்.எஸ். தத்துவம். விரைவில் சட்டமன்றத் தேர்தலை சந்திக்க விருக்கும் மாநிலம் உ.பி. இஸ்லாமிய வெறுப்பை ஊதி விட்டாலும் இந்துக்களை அணி திரட்ட முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது. ஆதித்ய நாத் ஆட்சி தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எதிராக செயல்படுகிறது என்று குற்றம் சாட்டி, பா.ஜ.க.விலிருந்து ஒவ்வொரு பிற்படுத்தப்பட்ட அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினர்களும் விலகி வருவது பா.ஜ.க.வையும் சங்பரிவாரங்களையும் அதிர்ச்சிக்குள்ளக்கியுள்ளது. ஆதித்யநாத் ஒரு பார்ப்பன ரல்லாத உயர்ஜாதியைச் சேர்ந்தவர். அம்மாநில பார்ப்பனர்களும் பா.ஜ.க. ஆட்சிக்கு எதிராகவே அணி திரண்டிருக்கின்றனர்.

கடந்த ஜனவரி 11ஆம் தேதி உ.பி.யில் துணை முதல்வராக இருந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் செல்வாக்கு மிக்க தலைவர் சுவாமி பிரசாத் மவுரியா. பா.ஜ.க.விலிருந்து விலகி சமாஜ்வாடி கட்சியில் சேர்ந்துள்ளார். இதனால் உ.பி. தேர்தல் அரசியல் 'இந்துத்துவா'வுக்கும் சமூகநீதிக்குமான போராட்டமாக உருவெடுத்துள்ளது என்று 'இந்து' ஆங்கில நாளேட்டில் (ஜன.16, 2022) வெளி வந்துள்ள அரசியல் ஆய்வுக் கட்டுரை கூறுகிறது.

பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த அமைச்சர்களும் ஏழு சட்டமன்ற உறுப்பினர்களும் பா.ஜ.க.வுக்கு முழுக்குப் போட்டு சமாஜ்வாடியில் இணைந்துள்ளனர். மவுரியா 5 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியில் 20 ஆண்டுகாலம் இருந்தார். 2016இல் பா.ஜ.க.வில் இணைந்தார். 1980இல் யுவலோக்தள் கட்சியிலிருந்து அவரது பயணம் தொடங்கியது. 1991இல் வி.பி. சிங்கின் ஜனதாதள் கட்சியின் உ.பி. மாநில செயலாளர் 1996இல் பகுஜன் சமாஜ் கட்சியில் சேர்ந்தார். மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியில் பிற்படுத்தப்பட்டோருக்கான முகமாக அவர் முன்னிறுத்தப்பட்டார். அம்பேத்கர் சிந்தனைகளில் ஊறிப் போனவர் புத்த மார்க்கத்தை நேசித்தவர். அவர் 'இந்துத்துவா' அரசியலக்குத் தாவிய நிலையில் இப்போது மீண்டும் சமூக நீதி அரசியலுக்குத் திரும்பியிருப்பது 'இந்துத்துவா'வின் தோல்வியையே உணர்த்துகிறது. அவரது மகள் சங்கமித்ரா, பா.ஜ.க.வின் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியில் தொடருகிறார். மவுரியா, குஷ்வகா, சாக்கியா, சைனி ஆகிய பிற்படுத்தப்பட்ட ஜாதியினரிடையே செல்வாக்குள்ள தலைவராக அவர் இருக்கிறார் என்று கூறுகிறது இந்த ஆய்வுக் கட்டுரை.



"பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஓரணியாகத் திரண்டு பார்ப்பனர் மற்றும் உயர்ஜாதியினருக்கு எதிராக பா.ஜ.க. அணியில் திரண்டுள்ளனர் என்றும் 80 சதவீத மக்கள் 20 சதவீத மக்களை எதிர்ப்பதே இந்தத் தேர்தல் என்றும்" பிரச்சாரத்தை பா.ஜ.க. முன்னெடுத்து வருகிறது. இந்துத்துவா சோதனைக் களமாகக் கூறப்பட்ட உ.பி. பா.ஜ.க.வே இப்போது பார்ப்பன உயர்ஜாதி எதிர்ப்பை முன் வைத்து தேர்தல் களத்தை சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. பார்ப்பனிய சமூகக் கட்டமைப்பைத் தகர்ப்பதற்கு பெரியார் முன் வைத்த முழக்கம். அதைத் தான் இப்போது உ.பி.யில் பா.ஜ.க.வே பேச வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதற்கு சமாஜ் வாடி கட்சியில் இணைந்தவுடன் பதிலடி தந்து பேசியிருக்கிறார் மவுரியா. 85 சதவீத பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் எங்கள் பக்கம் தான். 15 சதவீதம் பேர் மட்டுமே பா.ஜ.க.வின் பக்கம் இருக்கிறார்கள். பா.ஜ.க. தான் உயர்ஜாதி பார்ப்பனக் கட்சி" என்று கூறியிருக்கிறார். களத்தில் நிற்கும் இரண்டு பெரிய கட்சிகளுமே சமூக நீதியை - பார்ப்பன உயர்ஜாதி எதிர்ப்பை தேர்தல் களத்தில் முன் வைத்து வருகின்றன.

**8 ஆண்டுகளுக்கு முன்பு சுல்தான் பூர் என்ற இடத்தில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோரிடம் பேசிய மவுரியா, "திருமண நிகழ்வுகளில் இந்து கடவுள்களை வணங்காதீர்கள்; இந்த இந்து கடவுள்கள் பார்ப்பனர்களால் திட்டமிட்டு நமது மக்களை அடிமைப்படுத்த உருவாக்கப்பட்டவை"** என்று பேசினார். இந்தப் பேச்சுக்காக அவருக்கு 'கைது வாரண்ட்' பிறப்பிக்கப் பட்டது.

'இந்து' ஆங்கில நாளேடு வெளியிட்டுள்ள இந்த ஆய்வுக் கட்டுரை, 'இந்துத்துவா' அரசியலை - சமூக நீதி தத்துவம் வீழ்த்தி முன்னேறிச் செல்லும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

# ஜாதி ஒழிப்புக்கான ஓர் உரையாடல்

**விடுதலை இராசேந்திரன்**

***தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் சார்பில் வெளிவரும் 'அணையா வெண்மணி' காலாண்டிதழில் வெளியிடப்பட்ட கட்டுரை.***

உற்பத்தி உறவுகளில் மாற்றங்கள்; வாழ்வியல் மாற்றங்கள்; அறிவியல் சாதனைகளைப் பயன்படுத்துவதில் பாய்ச்சல்; வேகமான கல்வி வளர்ச்சி; அதிகார மிக்க பதவிகள்; அரசியல் அதிகாரங்கள் - இவ்வளவையும் கட்டுடைத்து, ஜாதி அடுக்கு இப்போதும் தன்னை தகவமைத்துக் கொண்டே இருக்கிறது. புதிய புதிய உருமாற்றங்களை எடுத்து மனித சமூகத்தைக் 'கவ்வி' நிற்கிறது.

ஜாதியக் கட்டமைப்புக்கான சமூக வேர்கள் குறித்து தமிழ்நாட்டில் பேசப்பட்ட அளவுக்கு வேறு எங்கும் பேசப்பட்டதே இல்லை. பிரிட்டிஷ் காலனி ஆட்சியிலேயே இது குறித்த விவாதங்களும் போராட்டங்களும் தொடங்கிவிட்டன. 'சுயராஜ்யம்' பேசுகிறவர்கள், சுயமரியாதையை மறுக்கும் ஜாதியத்தை பார்ப்பனியத்தை ஏன் எதிர்க்கவில்லை என்ற கேள்விகள் அன்றைக்கே பெரியாரும் - அம்பேத்கரும் கேட்டனர். அயோத்திதாசரும் அவர்களுக்கு முன்பு இதே கேள்வியைத் தான் கேட்டார். வேத காலத்தில் உருவாக்கப்பட்டது. வர்ணாஸ்ரமம், அதுகூட அப்போது பிறப்பின் அடிப்படையில் இல்லை என்று அம்பேத்கர் உள்ளிட்ட ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். வேதம் கற்கும் அறிவை அடிப்படையாக வைத்து குருகுலத்தில் குரு - யார் பிராமணன்? யார் சூத்திரன்? என்பதை உறுதி செய்தார். பிறப்பால் அனைவரும் பிராமணர். அதாவது இரு பிறப்பாளர் இல்லை என்ற நிலை தான்.

ஆனால், அந்த இரு பிறப்புக்குரிய அதிகாரம் தங்களிடமே நிரந்தரமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற சூழ்ச்சியால் 'குரு'விடம் இருந்த அதிகாரத்தை மாற்றி 'தந்தை'க்கு வழங்கினார்கள். தந்தை மகனையும் மகன் பேரனையும் பேரன் கொள்ளுப் பேரனையும் 'பிராமணராக்கி' வாரிசுரிமையாக்கிக் கொண்டார்கள். அந்த வாரிசுரிமையின் ஆணவக் குரல் தான் இப்போது 'அனைத்து ஜாதியினரும்' அர்ச்சகராகலாம் என்று தமிழக அரசு ஆணை பிறப்பிக்கும்போதும் கேட்கிறது. "பாரம்பரியம்; பழக்க வழக்கம்; மாற்ற முடியாதது; ஆகமம் கூறுகிறது; ஆட்சியைக் கலைத்து விடுவோம் என்கிறார்கள்". வர்க்கப் புரட்சிக்கு ஆயுதம் தூக்கும் போராளிகள் நடத்தும் அழித்தொழிப்பைவிட 'சத்ரு சம்ஹார யாகம்' வலிமையானது என்கிறார்கள். திமுக ஆட்சியையும் முதலமைச்சரையும் அழிக்க சத்ரு சம்ஹார யாகம் நடத்தியிருக்கிறார்கள். அந்த மாவோயிசப் போராளிகளுக்கு 'என்கவுண்டர்' காத்திருக்கிறது என்றால் இந்த 'என்கவுண்டர்' யாகக்காரர்களுக்கு கடவுள், மதம், ஆன்மீகம், இந்துத்துவாக்களின் ஆதரவும் பாராட்டுகளும் காத்திருக்கின்றன.

1920களிலேயே பல ஜாதி சங்கங்கள் தமிழ்நாட்டில் தோன்றின. அந்த சங்கங்கள் தங்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக குரல் கொடுத்தன. தங்கள் மீது திணிக்கப்பட்ட 'தீண்டாமை', 'ஜாதி இழிவு' அதனடிப்படையிலான 'தொழில்'களை எதிர்த்தன. பண்பு ரீதியில் இந்த சங்கங்கள் சமூக நீதிக்கான முற்போக்கானவை என்றே வரலாற்றுப் பார்வையில் மதிப்பிட வேண்டும். பெரியார் 1926 முதல் 1948 வரை பல ஜாதி சங்க மாநாடுகளில் பங்கேற்றுப் பேசினார். ஆதி திராவிடர் மாநாடுகள், நாடார் சங்க மாநாடுகள், செங்குந்தர் மாநாடுகள், வன்னியர் சங்க மாநாடுகள், பிற பார்ப்பனரல்லாத சங்க மாநாடுகளில் அவர் நிகழ்த்திய உரை அனைத்துமே அந்த மக்களுக்கு தன்னம்பிக்கையை ஊட்டியது, போராட்டத்துக்கு ஆயத்தமாக்கியது.

"நீங்கள் துணிவு கொண்ட புரட்சிக்கு தயாராகுங்கள்; நீங்கள் ஏன் கீழ் ஜாதி என்று கேள்வி கேளுங்கள்" என்று பேசிய பெரியார், கடவுள், மதக்

(4ஆம் பக்கம்)

**தலையங்கம்**

# இந்திய ‘குடியரசில்’ தமிழ்நாடு இல்லையா?

‘சுதந்திரம் பெற்ற நாளை மட்டுமல்ல, குடியரசு நாளையும் தமிழருக்கு துக்க நாள் தான் என்று பெரியார் அறிவித்தார். இந்திய அரசியலமைப்பு மாநிலங்களின் கூட்டமைப்பே ‘இந்தியா’ என்று கூறினாலும் நடைமுறையில் அப்படி ஏதும் இல்லை.

குடியரசு நாள் அணி வகுப்பில் நாட்டின் ஆயுத பலத்தை பிற நாடுகளுக்கு உணர்த்தும் நவீன ஆயுதங்களின் அணி வகுப்பு நடக்கிறது. ஆனால், ‘குடியரசு’ சட்டம் அங்கீகரித்துள்ள இறையாண்மை கொண்ட மாநிலங்கள் அவமதிக்கப் படுகின்றன.

‘இந்தியா’வின் சுதந்திரப் போராட்டம் – 75’ என்ற தலைப்பில் சுதந்திர இந்தியாவின் ‘சாதனைகளை’ முன் வைத்து பேரணி நடத்த முடிவு செய்தது ஒன்றிய ஆட்சி. தமிழ்நாடு அரசு குடியரசு நாள் பேரணிக்காக தமிழ்நாட்டில் கிழக்கிந்திய கம்பெனி மற்றும் பிரிட்டிஷ் அரசை எதிர்த்துப் போராடியவர்களை அடையாளப் படுத்தும் ஊர்தியை வடிவமைத்தது. ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சகத்தைச் சார்ந்த வரலாறு தெரியாத நிபுணர்கள் குழு இதை பரிசீலித்தது. அப்படித்தான் கூற வேண்டியிருக்கிறது.

கடந்த செப்டம்பரில் இருந்து நான்கு முறை நிபுணர் குழு கூடியது. மூன்று கூட்டங்களில் பங்கேற்ற தமிழக அரசு அதிகாரிகள் ‘நிபுணர் குழு’ வற்புறுத்திய மாற்றங்களை ஏற்றுக் கொண்டு, ஊர்திகளை வடிவமைத்தனர். நான்காவது கூட்டத்துக்கு தமிழக அரசு அதிகாரிகள் அழைக்கப்படாமலேயே தமிழ்நாடு அரசு ஊர்தி அனுமதிக்கப்படவில்லை என்ற அறிவிப்பு வெளி வந்து விட்டது.

தமிழக சுதந்திரப் போராட்ட வீரர்களாக வ.உ.சி., பாரதியார், வேலு நாச்சியார், மருது சகோதரர்கள் தேர்வு செய்யப் பட்டனர். பாரதி சுதந்திரப் போராட்ட வீரரா என்ற கேள்வி இருந்தாலும் இப்போது அதை முன் வைத்து இப் பிரச்சினையைப் பார்ப்பது சரியான அணுகுமுறையாகாது. இதிலே முதன்மையானக் கண்ணோட்டம் தமிழ்நாட்டின் இறையாண்மையை தமிழ்நாட்டு மக்களின் சுயமரியாதையை ஒன்றிய பார்ப்பன ஆட்சி அவமதித்திருக்கிறது என்பதுதான். இந்த நடவடிக்கை தமிழக மக்களின் உணர்வுகளைக் கடுமையாகக் காயப்படுத்துகிறது. ஒன்றிய அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

கேரளா, ஆந்திரா, தெலுங்கானா மாநில ஊர்திகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. பா.ஜ.க. ஆட்சி நடக்கும் கருநாடக அரசு ஊர்தி மட்டும் தென்னகத்திலிருந்து தேர்வு செய்யப்பட் டுள்ளது. நேதாஜி, இரவீந்திரநாத் தாகூர் இடம் பெற்ற மேற்கு வங்க ஊர்திகளுக்கும், கேரள சமூக சீர்திருத்தவாதி நாராயணகுரு இடம் பெற்றுள்ள ஊர்திக்கும் அனுமதி மறுக்கப்பட்டதற்கு வருத்தம் தெரிவித்து அம்மாநில முதல்வர்கள் பிரதமருக்கு கடிதங்கள் எழுதியுள்ளனர். நாராயண குரு அவமதிக்கப்பட்டு விட்டார் என்று கருநாடக மாநிலத்திலிருந்து கேரளாவுக்கு ஆதரவாக முன்னாள் முதல்வர்கள் சீத்தாராமய்யா, குமாரசாமி கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே தமிழ்நாடு உள்பட பல மாநில ஊர்திகள் இடம் பெறாமலே குடியரசு தின அணி வகுப்புகள் நடந்திருக்கின்றன என்றும் இதற்கு அரசியல் சாயம் பூசக் கூடாது என்றும் ஒன்றிய அரசு தரப்பில் விளக்கம் தரப்படுகிறது. மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி வந்த பிறகு தங்கள் கட்சி ஆளும் மாநிலங்களுக்கும் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களுக்குமிடையே பாகுபாடு காட்டி வருகிறது என்ற பின்னணியில் தான் இப்பிரச்சினையை அணுக முடியும். பா.ஜ.க. அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்களிடம் ஒன்றிய ஆட்சியின் அணுகுமுறை நேர்மையோ அறம் சார்ந்தோ இருந்தது இல்லை. எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் நிதி ஒதுக்கீடு, தடுப்பு ஊசி ஒதுக்கீடு பேரிடர் நிவாரண ஒதுக்கீடுகளில் வெளிப்படையான ‘பாகுபாடு’களை கூச்சநாச்சமின்றி காட்டி வருகிற ஒன்றிய ஆட்சி இப்பிரச்சினையில் ‘நடைமுறை’ காரணங்களைக் காட்டி தன்னை நியாயப்படுத்துவதை எவருமே ஏற்க மாட்டார்கள்.

குடியரசு தின அணி வகுப்பு என்றால் அனைத்து மாநிலங் களுக்கான பங்களிப்பும் அதில் இடம் பெறுவதே கூட்டாட்சிக்கான அடிப்படை. ஒன்றிய ஆட்சியின் ‘சாதனை’களாக வெளிச்சம் போடும் ஊர்திகளையும் ‘இராணுவ வலிமையை’ உணர்த்தும் ஊர்திகளையும் இதற்காகக் குறைத்துக் கொள்ளக் கூடாதா? மாநிலங்கள் இல்லாமல் ஒன்றிய அரசு என்று ஒன்று இருக்கவே முடியாது. மாநிலங்களுக்குத்தான் மக்கள் இருக்கிறார்கள். ஒன்றிய ஆட்சிக்கு மக்கள் இல்லை. அதுவும் பாதுகாப்புத் துறையில் அதிகாரிகளாக இருக்கும் வரலாறு தெரியாத ‘நிபுணர்கள்’ இந்த முடிவுகளை எடுப்பது தான் அவலம். “வ.உ.சி. கப்பல் வணிகம் செய்தவர்; வேலு நாச்சியார் யார் என்று வெளிநாட்டுக்காரர் களுக்கே தெரியாது” என்றெல்லாம் வாய்க் கொழுப்புடன் குழுவில் கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள்.

வெளிநாட்டுக்காரர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும் என்றால், இந்தியாவில் மோடி ஆட்சியில் பொதுத் துறை நிறுவனங்களை குத்தகைக்கு எடுத்த தொழிலதிபர்களின் உருவங்களைத்தான் அலங்கரித்து எடுத்துச் செல்ல வேண்டியிருக்கும். 40 ஆண்டுகள் சிறைத் தண்டனைப் பெற்று விடுதலையாகி வறுமையில் வாடி உயிரிழந்த வ.உ.சியை, அதுவும் ‘சுதேசி’ கொள்கையை முழங்கிய வ.உ.சி.யை இவர்கள் எப்படி அங்கீகரிப்பார்கள்?

‘குடியரசு நாள் தமிழருக்கு துக்க நாள்’ என்று குடியரசு நாள் அறிவிக்கப்பட்ட காலத்திலேயே பெரியார் கூறிய கருத்தின் ஆழம், தொலைநோக்குப் பார்வையை இப்போதாவது தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 20.01.2022**

## தேர்தல் நிதி திரட்டவே பொதுத்துறைகள் தனியார் மயம்

# ரூ.1 லட்சம் கோடிக்கான சொத்து வெறும் ரூ. 800 கோடிக்கு குத்தகை

ஒன்றிய அரசின் தனியார் மயமாக்கல் மூலம் தரமான, திறமையான, செயல்பாடு கொண்ட சண்டிகரின் லாபம் தரும் நிறுவனம், கொல்கத்தாவில் உள்ள தனியார் நிறுவனத்துக்கு, ரூ.800 கோடிக்கு விற்கப்பட உள்ளது. அதுவும் 90 ஆண்டுகளுக்கு! குத்தகைக்குத்தான் தருகிறோம் என்று கூறினாலும், உண்மையில் இது விற்பனை செய்வதற்கு சமமான ஒன்று. இந்த சொத் துக்களின் மதிப்பு குறைந்தபட்சம் ரூ.1 லட்சம் கோடி என்று நிபுணர்கள் கூறுகின்றனர். அவ்வாறு இருக்கையில், இவ்வளவு பெரிய சொத்திற்கு, ரூ.800 கோடி கொடுப்பதில் அந்த தனியார் நிறுவனத்துக்கு என்ன சிரமம் இருக்கப் போகிறது? இந்த 800 கோடி ரூபாய் முதலீடு நான்கு ஆண்டுகளில் அந்த புதிய தனியார் நிறுவனத்திற்கு கிடைத்துவிடும். இவ்வளவும் தெரிந்தும் எதற்காக பொதுத் துறை மின் நிறுவனங்களை விற்க வேண்டும்? ஒன்றிய அரசின் பட்ஜெட்டுக்கு நிதி திரட்டு வதற்காகவா? இல்லை. பட்ஜெட்டுக்கு பணம் திரட்டுவது மட்டுமின்றி பாஜக வுக்கு தேர்தல் நிதி திரட்டவும் சேர்த்துத்தான் இந்த பகல் கொள்ளை. தனியார்மயத்திற்கான கமிஷனை தேர்தல் பத்திரங்கள் மூலம் பாஜக பெற்றுக் கொள்ளும். மின்சார சட்டம் நிறைவேற வில்லை என்றாலும் தனியார்மயம் தொடரவே செய்யும்.

ஜன.17- பாஜகவுக்கு தேர்தல் நிதி திரட் டவே லாபத்தில் இயங்கும் பொதுத் துறைகள் தனியார்மயம் ஆக்கப்படுவதாக பொருளாதார வல்லுநரும் கேரள முன்னாள் நிதியமைச்சருமான தாமஸ் ஐசக் தெரிவித் துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியிருப்பதாவது: மூன்று யூனியன் பிரதேசங்களில் உள்ள மின் விநியோக நிறுவனங்களை தனியார் மயமாக்க ஒன்றிய அரசு டெண்டர் உறுதி செய்துள்ளது. இதற்கு ஒன்றிய அரசு வெளி யிட்டுள்ள காரணம் என்னவெனில், மின் விநியோகத் துறையில் போட்டியை ஏற்படுத்துவதன் மூலம் பொதுத் துறை நிறுவனங்களின் திறனை அதிகரிக்கிறோம் என்பதாகும். மேலும், “இந்தியாவின் மின்சார விநியோகத் துறையில் விநியோகச் சங்கிலி மிகவும் பலவீனமாக உள்ளது. கட்டணங்களை முறையாகச் செலுத்தாதது, நிலுவைத் தொகையை வசூலிக்காதது நீடிக்கிறது.

குறிப்பாக, மாநில அரசுகளின் பெரும் நிலுவைத் தொகை, அரசுக்குச் சொந்தமான டிஸ்காம்கள் அல்லது விநியோக நிறுவனங் களுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி யுள்ளது. இது ஒட்டு மொத்த மின் துறையின் நம்பகத் தன்மைக்கும் சவாலாக உள்ளது” என ஒன்றிய அரசு கூறியுள்ளது. ஆனால், இப்போது விற்பனைக்கு வந்துள்ள சண்டிகர் டிஸ்கா மின் உண்மை நிலையை ஆய்வு செய்தால், ஒன்றிய அரசு கூறுவது எவ்வளவு பொய்யானது என்பதை தெரிந்து கொள்ள லாம். முதலாவதாக இந்த பொதுத் துறை நிறுவனம் நஷ்டத்தில் இல்லை. பெரும் லாபத் தில் உள்ளது. 2015-16ஆம் ஆண்டுக் கான லாபம் ரூ.100 கோடி, 2016-17-இல் ரூ.196 கோடி, 2017-18-இல் ரூ.258 கோடி, 2018-19இல் ரூ. 117 கோடி 2019-20இல் ரூ.151 கோடி, 2020-21 ரூ.225 கோடி. இதில் நஷ்டம் எங்கே இருக்கிறது?. இரண்டாவதாக, விநியோக இழப்பைக் குறைப் பதாக கூறுவதாகும். விநியோக இழப்பு 15 சதவிகிதம் என்று ஒன்றிய அரசு கூறுகிறது.

ஆனால், சண்டிகரில் உள்ள பொதுத் துறை விநியோக நிறுவனம் 9.5 சத விகிதம் மட்டுமே விநியோக இழப்பைக் கொண்டிருக் கிறது. இதிலும் திறமையின்மை எங்கே இருக் கிறது?. மூன்றாவதாக, சண்டிகர் இந்தியாவில் மிகக் குறைந்த கட்டண விகிதங்கள் கொண்ட டிஸ்காம் ஆகும். 150 யூனிட்கள் வரை பஞ் சாப்பில் ரூ. 3.49 ஆகவும், ஹரியானா வில் ரூ. 2.50 ஆகவும் சண்டிகரில் ரூ.2.5 ஆகவும் உள்ளது. பஞ்சாபில் 300 யூனிட்டுகளுக்கு மேல் உள்ள வாடிக்கையாளர்கள் ரூ.7.30 செலுத்த வேண்டும். ஹரியானாவில், 500 யூனிட்டுகளுக்கு மேல் உள்ள வாடிக்கை யாளர்கள் ரூ.7.10 செலுத்த வேண்டும். இதுவே சண்டி கரில், 400 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தும் வாடிக்கையாளர் களுக்கு ரூ. 4.65-க்கு மின்சாரம் கிடைக்கிறது. ஆனால், தற்போது தனியார்மய மாக்கலால் சண்டிகரில் உள்ள நுகர்வோர் பெரும் இழப்பை சந்திப்பார்கள். அவர்களுக்கு மின் கட்டணம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

# ‘இரயில் நிலைய மேம்பாட்டுக் கட்டணம்’ என்ற புதிய கொள்ளை!


இரயில்வே துறையை தனியார்மய மாக்குவதற்கு முன்னோட்டமாக இரயில் நிலையங்களை தனியார்மய மாக்குவது, ஒன்றிய அரசின் திட்டங்க ளில் ஒன்றாகும். அதாவது, விமான நிலையங் களை 50 ஆண்டுகளுக்கு அதானிக்கு குத்தகை விட்டதுபோல, இந்தியாவின் முக்கியமான இரயில் நிலையங்களை தனியார் முதலாளிகளுக்கு குத்தகைக்கு விடும் வேலையாகும். நாட்டிலேயே முதன்முதலாக போபால் அருகில் உள்ள ஹபீப்கஞ்ச் நகர இரயில் நிலையம் இவ்வாறு தனியாருக்கு கொடுக்கப்பட்டது. இந்த இரயில் நிலையத்தை சர்வதேச தரத்துக்கு மாற்ற பன்சால் குழுமத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் 50 ரயில் நிலையங்கள் அரசு - தனியார் கூட்டுத் திட்டத் தின் (PPP) அடிப்படையில் மேம்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இவ்வாறு இரயில் நிலையங்களை குத்தகைக்கு எடுக்கும் தனியார் நிறுவனங்கள், அந்த இரயில் நிலையங்களை உலகத் தரத்திற்கு மேம்படுத்துகிறோம் என்ற பெயரில், இரயில் நிலையங்களிலேயே ஷாப்பிங் மால், உணவகங்கள், பார்க்கிங், சோலார் எனர்ஜி உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்துவார்கள்; இதற்கு செலவிட்ட தொகையை, இரயில் பயணிகளிடமிருந்தே (நெடுஞ்சாலை சுங்கச்சாவடி களில் நடப்பது போல) வசூலித்துக் கொள்வார்கள் என்பதால், 2017 ஆம் ஆண்டு இதற்கான வேலைகள் துவங்கிய போதே எதிர்ப்பு எழுந்தது. இது தனியார் மயத்திற்கான திட்டம் என்றும், இரயில் பயணிகளிடம் சட்டப்பூர்வமாக கொள்ளையடிப்பதற்கான ஏற்பாடு என்றும் குற்றச் சாட்டுக்கள் எழுந்தன. தற்போது, எதிர்பார்த்தது போலவே, இரயில் நிலைய மேம்பாட்டுக் கட்டணமாக பயணிகளின் டிக்கெட்டில் ரூ.10 முதல் ரூ.75 வரை கூடுதலாக வசூலிக்க இரயில்வே வாரியம் முடிவு செய்துள்ளது.

நாடு முழுவதும் 50க்கும் மேற்பட்ட இரயில் நிலையங்கள் தனியார் பங்களிப்புடன் மேம்படுத் தப்பட்டு வரும் நிலையில், இந்த மேம்படுத்தப்பட்ட இரயில் நிலையங்களில் மட்டும்தான் என்றில்லாமல், எதிர் காலத்தில் மேம்படுத்தப்படும் பட்டியலில் உள்ள இரயில் நிலையங்களிலும் பயணிகளிடமும் இந்தக் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இந்தக் கட்டணத்துக்கு இரயில் நிலைய மேம்பாட்டுக் கட்டணம் (Station Development Fee - SDF ) எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதன்படி, ஏசி வகுப்பில் பயணிப்போர் இரயில் நிலைய மேம் பாட்டுக் கட்டணமாக ரூ.50ஆம், படுக்கை வசதி கொண்ட பெட்டியில் பயணிப்போர் ரூ.25ஆம், முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளில் பயணிப்போர் ரூ.10ஆம் கூடுதல் கட்டண மாக செலுத்த வேண்டும். மேம்படுத்தப்பட்ட இரயில் நிலையத்தில் இருந்து புறப்படுவதற்கு மட்டுமன்றி, மேம் படுத்தப்பட்ட இரயில் நிலையத்தில் இறங்குவதற்கும் தனியாக கட்டணம் செலுத்த வேண்டும்.

அதாவது, 2 நிலையங்களுக்கும் தலா 50 ரூபாய் மேம்பாட்டு நிதி என்ற வகையில் இவர்கள் 100 ரூபாய் அனாமத்தாக செலுத்த வேண்டும். ஆனால், ஏனோ இவர்கள் மீது சற்று இரக்கம் காட்டியுள்ள இரயில்வே நிர்வாகம், 2 மடங்கிற்குப் பதில் ஒன்றரை மடங்கு (75 ரூபாய்) செலுத்தி னால் மட்டும் போதும் என்று சலுகை வழங்கியுள்ளது. ஒரு பயணி புறப்படும் இரயில் நிலையம் மேம்படுத்தப்படும் பட்டியலில் இல்லாமல், இறங்கும் இரயில் நிலையம் மேம்படுத்தப்படும் பட்டியலில் இருக்கும் பட்சத்தில் அவர்களும் கட்டணம் செலுத்தியாக வேண்டும். சரி இத்துடன் முடிந்து விட்டதா, என்றால் இல்லை... மேம்படுத்தப்பட்ட இரயில் நிலையங்களில் நடைமேடைகளை பயன்படுத்துவதற்கும் தனியாக ஏற்கெனவே உள்ள கட்டணத்துடன் கூடுதலாக ரூ,10 கட்டணம் செலுத்த வேண்டுமென இரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## உனக்கு ஞாபகமிருக்கட்டும்!



நான் சொல்கிறேன், இந்த அரசியல் சட்டத்தை நாங்கள் ஏற்க மாட்டோம். இந்த அரசியல் சட்டம் எங்களுக்குத் தீங்கிழைப்பதாகும்; இது எங்கள் பிரதிநிதிகளால் செய்யப்பட்டதல்ல; நெருப்பில் போட்டுப் பொசுக்குவோம் என்று.

இந்த அரசியல் சட்டத்தை, யார் சம்மதத்தின் பேரில் யாரைக் கொண்டு செய்தாய்? வெள்ளைக்காரன் காலத்திலே அவன் நலனுக்காக, அவன் வகுத்த தேர்தல் விதிகளின்படி, படித்தவனுக்கும், பணக்காரனுக்கும் ஓட்டு என்கிற அடிப்படையில் நடத்திய தேர்தலில் வந்தவர்களை வைத்துக் கொண்டு, அரசியல் சட்டத்தை நிறைவேற்றி விட்டாய். வெள்ளையன் இந்தப் பிரதிநிதிகளைக் கொண்டு செய்த சட்டத்தை எதிர்த்து, நீயே சட்ட மறுப்புச் செய்திருக்கிறாய் என்பது, வடவனே உனக்கு ஞாபகமிருக்கட்டும் !

**‘விடுதலை’ 07.08.1952**

# அமெரிக்க ஏட்டில் ‘பார்ப்பனர்’ கூக்குரல்! ஆதாரங்களுடன் மறுக்கிறார், அமைச்சர் பி.டி.ஆர்.

*திராவிட இயக்கம் மற்றும் சோஷலிசக் கொள்கைகளால் தமிழ்நாட்டிலிருந்து ‘பிராமணர்கள்’ துரத்தப்பட்டார்கள் என்று ‘வால்ஸ்ட்ரீட் ஜெர்னல்’ ஏட்டில் துமா என்ற பார்ப்பனர் எழுதிய கட்டுரையை மறுத்து தமிழக நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் எழுதிய கட்டுரையின் சுருக்கமான தமிழ் வடிவம்.*

சமூக நீதி இயக்கம், அனைவரையும் உள்ளடக்கியது. அதன் பயன்களை இன்றைக்குத் தமிழ்நாடு அடைந்துள்ளது. மக்களுடைய அனுபவங்களால் மட்டுமல்லாது, அசைக்க முடியாத தரவுகளின் அடிப்படையிலும் இது இன்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டுக்கு வெளியே தமிழ்நாட்டைப் பற்றி வேறொரு சித்திரமும் தீட்டப்படுகிறது. சமூக நீதி இயக்கமான திராவிட இயக்கத்தால் தமிழ்ப் பிராமணர்கள் துரத்தப்பட்டார்கள் என்ற பொய் பிரச்சாரமே அது!

அமெரிக்காவின் மூன்று பெரும் பத்திரிகைகளில் ஒன்றான ‘வால் ஸ்ட்ரீட் ஜர்னல்’ அப்படி ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது. ‘கமலா ஹாரிஸ் தனது தாயின் பின்னணியைப் பற்றிச் சொல்லாதது ஏன்?’ என்ற தலைப்பில் துமே என்பவர் எழுதியதே இப்படி ஒரு கட்டுரையை என்னை எழுதத் தூண்டியது. மிக மேலோட்டமானதாகவும், சிக்கலான பிரச்சினைகள் குறித்த தவறான புரிதலோடும் அது எழுதப்பட் டுள்ளது.

**கமலா ஹாரிஸும் துமேவும் :** கமலா ஹாரீஸின் தாயார் சியாமளா கோபாலன் பிறந்த “பிராமணர்”கள் சமூகம் தொடர்பில் அமெரிக்கர்கள் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது என்கிறார் துமே. இந்தக் கருத்தின் உள்கூற்றை ஆங்கிலத்தில் சொன்னால் ‘Cautionary Tale of Excess’ என்பார்கள், அதாவது அதைப் படிப்பவர்களுக்கு ஓர் அதிகப்படியான அபாய எச்சரிக்கையை உண்டாக்கும். அதற்கு மாறாக, விரிவான தமிழ் அரசியல் வரலாற்றைப் படிக்க வேண்டும். அது படிப்பினைகளை வழங்கும் என்பதே எனது கருத்து.

தமிழ்ப் பிராமண சமூகம் தங்கள் சொந்த மாநிலத்தில் நியாயமற்ற விதத்தில் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்கிறார் துமே.

இந்த விளிம்பு நிலையாக்கலுக்கு கமலா ஹாரிஸுடைய தாய் சியாமளா கோபாலன் (புலம்பெயர்வு 1958) போன்ற தமிழ்ப் பிராமணர்களின் புலம்பெயர்வு சான்றாகிறது; மேலும், முன்னாள் பெப்சி தலைமை நிர்வாக அதிகாரி இந்திரா நூயி (புலம்பெயர்வு 1978), கூகுள் அதிகாரி சுந்தர் பிச்சை (புலம்பெயர்வு 1993) மற்றும் துமேவால் பெயர் குறிப்பிடப்படாத பலர், நோபல் பரிசு பெற்ற இருவர் உட்பட பலரின் எடுத்துக்காட்டுகள் துமேவின் கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய தமிழ்ப் பிராமணர்களின் புலம்பெயர்வு... அவர்களின் பூர்விகமான தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் குறிப்பிடத்தக்க இழப்பு என்கிறார் துமே.

இந்த புலம்பெயர்வுக்குக் காரணங்கள்: சோஷலிஸம் மற்றும் அடையாள அரசியல்; அதாவது திராவிட அரசியல் என்கிறார் துமே.

கடைசியில் துமே இத்தகு கொள்கை முடிவுகளுக்குச் செல்கிறார்: சோஷலிஸ கோட்பாடும் அடையாள அரசியலும் மக்களுக்கும் மாநிலத்துக்கும் நாட்டுக்கும் கேடு இதற்கு தமிழ்நாடு வளர்ச்சியில் பின்தங்கியிருப்பதே சான்று என்கிறார்.

இதற்கெல்லாம் எந்தப் புள்ளிவிவரத்தையும் துமே காட்டவில்லை.

பிராமணர்கள் அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்ததற்காகக் கூறப்படும் ‘துரத்தப்பட்டார்கள்’ என்ற காரணம் அற்பமானதாக இருக்கிறது. அமெரிக்காவுக்கு உலகெங்கிலுமிருந்து புலம்பெயர்வு நிகழ்கிறது. மேலும், இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும், உலகின் அனைத்து நாடுகளிலும் நிலவும் பொதுவான கண்ணோட்டம் என்னவென்றால், இது பெரும்பான்மையாக ஒடுக்குமுறையின் காரணமாக அல்ல, வாய்ப்புகளின் அடிப்படையிலான புலம்பெயர்வே என்பதுதான்.

அமெரிக்காவின் குடிவரவு சேர்க்கைக்கான முன்னுரிமைகளெல்லாம் பெருமளவில் அதிக திறன்-பங்களிப்பு-மதிப்பு கொண்டவர்களுக்கு சாதகமான வகையில் இருப்பதால் இந்தப் புலம்பெயர்வு சாத்தியமாகிறது. ஆனால், இந்தப் பொதுச் சட்டகத்துக்கு அப்பால், துபேவால் மேலே குறிப்பிடப்பட்ட மூன்று பேருமே பொதுவான ஒன்றைக் கொண் டுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் பட்டதாரி மாணவர் களாக அமெரிக்காவில்



நுழைந்தனர் - நானும் அவர்களைப் போல மாணவனாகத்தான் அமெரிக்கா சென்றேன்.

இன்று அமெரிக்காவில் உலகிலேயே சிறந்த பட்டதாரிக் கல்வி முறை உள்ளது (எண்ணிக்கை, தரத்தின் அடிப்படையில்). எனவே, இது உலகின் ஒவ்வொரு நாட்டிலிருந்து வரும் ஆர்வமுள்ள மாணவர்களை அதிக அளவில் தன்வசம் ஈர்க்கிறது. அப்படிப் பட்டம் படிக்கச் சென்றவர்கள்தான் இவர்கள்; தமிழ்நாட்டிலிருந்து துரத்தப்பட்டவர்கள் அல்ல.

குறைந்தது 19ஆம் நூற்றாண்டிலிருந்து சிறந்த சர்வதேசக் கல்வியை நோக்கிச் செல்வதற்குத் தமிழ்நாட்டின் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்பு இருந்திருக்கிறது. நீதிக் கட்சியின் தலைவர்கள் பலர், பெரும்பாலும் பிராமணரல்லாத மேல்தட்டு வர்க்கத்தினர், அப்போதைய சிறந்த உயர் கல்வியிடமாக கருதப்பட்ட பல்கலைக்கழங்களில் (ஆக்ஸ்ஃபோர்டிலும் கேம்பிரிட்ஜிலும்) கல்வி கற்றனர். நீதிக் கட்சித் தலைவர்களில் ஒருவரான என் தாத்தா 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் லண்டனில் உள்ள தி லேஸ் பள்ளி, இயேசு கல்லூரி (ஆக்ஸ்போர்டு) மற்றும் லண்டன் இன்னர் டெம்பிள் ஆகியவற்றில் கல்வி கற்கும் வசதியைப் பெற்றிருந்தார்.

சுதந்திரத்துக்குப் பிறகு கடந்த 70 ஆண்டுகளாக இந்தியாவில் பெரும் முன்னேற்றம் இருந்தபோதிலும், இந்தியக் கல்விச் சூழல் என்பது அமெரிக்கக் கல்வி அமைப்புடன் ஒப்பிடும் அளவுக்கு இல்லை. தேவையுள்ள அனைவருக்கும் இடமளிக்கும் அளவுக்கு இந்தியக் கல்வி அமைப்பு இல்லை. இதன் விளைவாக மிகச் சிறந்த திறமைசாலிகள் மட்டுமே அமெரிக்காவுக்குப் பட்டப் படிப்பு படிப்பதற்குச் செல்ல முடிந்தது. எனவே, சியாமளா கோபாலன், இந்திரா நூயி, சுந்தர் பிச்சை மற்றும் பல தமிழ் “பிராமணர்”களால் இத்தகைய விசாலமான லட்சியத்தை நோக்கிச் செல்ல முடிந்தது; பெரும்பான்மையினரால் அப்படிச் செல்ல முடியவில்லை, என்பதே உண்மை. மேலும் தரமான கல்வி பெறும் நோக்கத்துக்காக அந்த வாய்ப்புகள் அவர்களுக்கு மட்டுமே இருந்ததால் புலம் பெயர்ந்தனர்.

அமெரிக்காவில் அதிக அளவு தமிழ்ப் “பிராமணர்கள்” இருக்கிறார்கள் என்ற அவர் கூற்றை (இது ஆதாரமற்றது) நாம் எடுத்துக்கொண்டால், இவ்வளவு சிறிய சமூகத்திலிருந்து இவ்வளவு அதிகமானோரால் எப்படி அமெரிக்காவுக்குச் செல்ல முடிந்திருக்கிறது. துரத்தப்பட்டார்கள் என்ற கூற்றுக்கு இதுவே மறுப்பாகவும் கூற முடியும்.

துமேவின் ஈவிரக்கமற்ற, முற்றிலும் தவறான கருத்து என்னவென்றால் அடையாள அரசியல் காரணமாகத் தமிழகத்தில் மோசமான சமூக-பொருளாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன என்பதுதான். இதைவிட உண்மைக்குப் புறம்பானது எதுவும் இருக்க முடியாது.

துமே அடையாள அரசியல் என்று சொல்வது நூற்றாண்டு பழமையானதும், சமூக நீதியைக் குறிக்கோளாகக் கொண்டதுமான நமது திராவிட இயக்க அரசியல் ஆகும்.

1920 முதல் இந்த நூறு ஆண்டுகளில், சுமார் 30 ஆண்டுகளைத் தவிர திராவிட இயக்கக் கோட்பாடுகளை ஆதரிக்கும் கட்சிகள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மேலும், மீதமுள்ள 30 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றிய காங்கிரஸ் கட்சியின் கொள்கைகள் பிற மாகாணங்களிலும் மாநிலங்களிலும் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளைவிட திராவிட இயக்கக் கோட்பாடுகளுக்கு நெருக்கமாக இருந்தன (எ.கா. கோயில் நுழைவுக்கான உரிமைகளை உறுதி செய்வது, அனைவருக்கும் கல்வி என்ற கொள்கை, மாநிலம் முழுவதும் இலவசப் பள்ளி உணவுத் திட்டத்தை விரிவுபடுத்துதல்). (ஆதாரம்: ரிசர்வ் வங்கி, நிதி ஆயோக், தேசிய சுகாதார அறிக்கைகள் 2019, 2020)

திராவிட இயக்கக் கொள்கைகளைத் தொடர்ச்சியாகப் பின்பற்றியதன் காரணமாக ஒரு தனித்துவமான நிலைக்குத் தமிழ்நாடு (இந்தியாவின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடுகையில்) வந்துள்ளது- இது திராவிட (தமிழ்நாடு) மாதிரி என்று அழைக்கப்படுகிறது.

ஒப்பீட்டளவிலான இந்த முன்னேற்றத்தின் ஆகச் சிறந்த ஆதாரமாக, சென்னையில் 2018-ல் திமுக சார்பாக இந்தியாவின் 15-வது நிதி ஆணையத்தின் விசாரணையின்போது நான் அளித்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள கருத்துகளைச் சொல்லலாம்

இந்திய அரசமைப்புச் சட்டம் இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியம் என்று அழைத்தாலும் அது மையப்படுத்தப்பட்டதாகவும் கூட்டாட்சி அல்லாத முறையாகவுமே இயங்குகிறது, அதாவது சீனாவை விடவும் மையப்படுத்தப்பட்டதாக உள்ளது. இதன் மூலம் டெல்லியில் உள்ள ஒன்றிய அரசு நேரடி வரிகளில் பெரும்பாலானவற்றை வசூலிக்கிறது, பின்னர், அவற்றை மாநிலங்களுக்கு முறையாக வழங்குவது இல்லை. 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிதி ஆணையங்களின் பரிந்துரைகளைப் பின்பற்றி ஒதுக்குகிறது.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கானது அதன் மக்கள்தொகை விகிதத்தைவிட அதிகமாக உள்ளது. கடந்த பல ஆண்டுகளாக இந்தப் பங்களிப்பு பெரும்பாலும் அதிகரித்துவந்தும், மத்திய வரி வருவாய்ப் பங்கிலிருந்து இருந்து நமக்கு வழங்கப்படும் ஒதுக்கீடு 7ரூ-க்கும் குறைந்து 4ரூ -ஆக உள்ளது. எளிமையான சொல்வதென்றால், நாம் தொடர்ந்து ஒப்பீட்டளவில் பணக்கார மாநிலமாக வளர்ந்துவருகிறோம், மேலும் பெரிய மொத்த வரிக் கொடையாளர்களாகி வருகிறோம்.

மேலும் ஒரு படி மேலே சென்று, சில குறியீட்டெண்களில், தமிழகம் OECD (Organisation for Economic Co-operation and Development) உலக நாடுகள் அளவுக்கு முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்றும் கூறுவேன்.

உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சரியான தத்துவம் அல்லது ஆட்சி முறை என்று ஒன்று இல்லாத நிலையில், தற்போதுள்ள அனைத்து மாதிரிகளும் ஏதோ ஒரு வகையான குறைபாடுகளைக் கொண்டிருக்கின்றன. திராவிட மாதிரியை மிகவும் தீவிரமாகப் பின்பற்றுபவன் நான் என்றாலும், அந்த மாதிரியில் பல பரிமாணங்களில் இன்னும் முன்னேற்றங்கள் தேவை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் துமே சுட்டிக்காட்டும் குறைபாடுகளுடன் தரவுகள் பொருந்திப் போகவில்லை. **அவரது அனுமானங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் ஆயிரம் ஆண்டுகளாக சாதிக் கட்டமைப்புகளில் பொதிந்துள்ள பாகுபாட்டைக் கொண்ட ஒரு மண்ணில் ஒரு நூற்றாண்டுக்குள் அதிவேகமான திராவிட மாதிரியின் சமூக நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி தன்னிகரற்ற விளைவுகளை அடைந்துள்ளது என்பதைத் தரவுகள் தெளிவுபடுத்துகின்றன.**

இது ஒன்றும் சாதாரண சாதனை இல்லை. எனவே, இது குறித்து துமே மட்டும் அல்லாது இப்படிப் பேசுபவர்கள் யாராக இருந்தாலும், முழுமையாகக் கற்றுணர்ந்து, முறையான கொள்கைப் பாடங்களைப் புரிந்து கொண்டு பேசுவதே சிறந்தது.

(அமைச்சர் தனது கட்டுரைக்கு சான்றாக இந்தியாவில் பார்ப்பன ஆதிக்கம் குறித்த ஏராளமான புள்ளி விவரச் சான்றுகளை இணைத்துள்ளார்) ●

## சுயமரியாதை இணையேற்பு நிகழ்வு

*கோமதி –ஆனந் பாபு ஆகியோரின் இணையேற்பு விழா 10.01.2022 அன்று திருப்பூர் மாவட்ட கழகத் தலைவர் முகில் ராசு தலைமையில் நடைபெற்றது.*

*கழக மாநகர தலைவர் தனபால். மாநகர அமைப்பாளர் முத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாரிமுத்து, திலகவதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திவிக சார்பில் கழகத் தோழர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.*

*இணையர்கள் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக ரூபாய் 3000/– வழங்கினர். மதியம் மாட்டுக்கறி உணவு அனைவருக்கும் வழங்கப்பட்டது. பெண் வீட்டார் சார்பாக அம்மா கர்ப்பகவள்ளி, தாத்தா முருகன், மாமா நல்லமுத்து, தம்பி லிங்கேசுவரன் நண்பர் சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY
PURATCHI PERIYAR MUZHAKKAM
REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# சூரங்குடியில் கழகக் கலந்துரையாடல் கூட்டம்

தூத்துக்குடி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் சந்திப்பு மற்றும் கலந்துரையாடல் கூட்டம் 01.01.2022 சனிக்கிழமை மாலை 06.00 மணியளவில் தூத்துக்குடி மாவட்டம் சூரங்குடியில் நடைபெற்றது.

கலந்துரையாடல் கூட்டத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் கழக இதழான 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வார இதழுக்கு சந்தா சேர்க்கவும் இம்மாதம் முழுவதும் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பிரச்சார இயக்கமாக நடத்திட வேண்டும் என்றும் கொரானா தொற்று தற்போது பெருகி வருவதால் தொற்று குறைந்ததும் சூரங்குடியில் கொள்கை விளக்க பிரச்சாரப் பொதுக்கூட்டம் நடத்திடவும், தீர்மானிக்கப்பட்டது.

நிகழ்வில் கலந்து கொண்ட கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி, கழக பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் தோழர்களுக்கு இதழ் சந்தா சேர்ப்பு அவசியம் மற்றும் நடைமுறை சிக்கல்களை எப்படி கையாள்வது பற்றியும் பெரியார் இயக்க கொள்கைகளை விளக்கியும் உரையாற்றினர்.

நிகழ்வை தூத்துக்குடி மாவட்ட துணைச் செயலாளர் சூரங்குடி மாரிச்சாமி மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். நிகழ்வில் தூத்துக்குடி மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் கண்ணதாசன், வே.பால்ராசு, ச.கா.பால சுப்பிரமணியன், சந்திரசேகர் பெரியசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்

# இந்திய பணக்காரர்கள் 10 பேரின் சொத்தை வைத்து 25 ஆண்டுகளுக்கு இலவசக் கல்வி தரலாம்

இந்தியாவிலுள்ள வெறும் 10 பெரும்பணக்காரர்களின் சொத்து மதிப்பை வைத்து, அடுத்த 25 ஆண்டுகளுக்கு நாட்டில் அனைத்துக் குழந்தைகளுக்கும் பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வியை இலவசமாக வழங்கலாம் என்று 'ஆக்ஸ்பாம் இந்தியா' அமைப்பு தெரிவித்துள்ளது. ஸ்காட்லாந்தில் உள்ள டாவோஸ் நகரில் உலகப் பொருளாதார மாநாடு ஞாயிறன்று தொடங்கிய நிலையில் இந்தியாவில் அதி கரித்து வரும் சமத்துவமற்ற சமூகம் குறித்த அறிக்கையை 'ஆக்ஸ்பாம் இந்தியா' வெளி யிட்டுள்ளது. அதில் இதேபோல மேலும் பல விவரங்களை ஆக்ஸ்பாம் அளித்துள்ளது. கொரோனா பெருந்தொற்று காலத்தில் இந்தியாவில் பெரும்பணக்காரர்களின் எண்ணிக்கை 39 சதவிகிதம் அதிகரித்து 142 ஆக உயர்ந்துள்ளது. பலரின் சொத்து இரு மடங்காக உயர்ந்துள்ளது. இந்தியாவில் உள்ள பெரும்பணக்காரர் களில் 10 சதவிகிதம் பேருக்கு வெறும் ஒரு சதவிதம் கூடுதல் வரி விதித்தால் கூட கொரோனா பெருந்தொற்று காலத்தில் கூடுதலாக 17.7 லட்சம் ஆக்சிஜன் சிலிண்டர்கள் வாங்க முடியும். 98 சதவிகித பெரும்பணக்கார குடும்பங்களுக்கு சொத்துவரி விதித்தால், ஒன்றிய அரசின் மிகப்பெரிய காப்பீடுதிட்டமான ஆயுஷ்மான் பாரத் திட்டத்துக்குத் தேவையான நிதியை அடுத்த 7 ஆண்டுகளுக்கு வழங்க முடியும். சொத்துக்களில் சமத்துவமின்மை அதிகரித்துள்ளது. 142 பெரும்பணக்கார்களின் ஒட்டுமொத்த சொத்தின் மதிப்பு ரூ.53 லட்சம் கோடிக்கும் மேலாக (71900 கோடி டாலர்) அதிகரித்துள்ளது. நாட்டில் உள்ள 40 சதவிகித மக்களின்- அதாவது 55.5 கோடி பேரின் ஒட்டுமொத்த சொத்துக்கு இணையான சொத்தை (ரூ. 49 லட்சம் கோடி) வெறும் 98 பெரும்பணக்காரர்கள் மட்டும் வைத்திருக்கின்றனர்.

முதல் 10 இடங்களில் உள்ள பெரும்பணக் காரர்கள், தங்களிடமுள்ள பணத்தில் நாள்தோறும் 10 லட்சம் டாலர் (ரூ. 7.41 கோடி) என்று செலவு செய்தாலும் அவர்களின் சொத்துக்களை முழுவதும் செலவழித்து முடிக்க 84 ஆண்டுகள் ஆகும். இந்த 142 கோடீஸ்வரர்களுக்கு சொத்துவரி விதித்தால், ஆண்டுக்கு 7,830 கோடி டாலர் ஒன்றிய அரசுக்கு வருமானமாக கிடைக்கும். அதாவது, ஒன்றிய அரசின் சுகாதாரத்துக்கான செலவுக்கான தொகையை 271 சதவிகிதம் உயர்த்த முடியும். இந்தியாவில் உள்ள 10 சதவிகித பெரும்பணக்கார்களிடம்தான் நாட்டின் 45 சதவிகித சொத்துக்கள் இருக்கின்றன, மற்ற 50 சதவிகித மக்களிடம் வெறும் 6 சதவிகிதம் சொத்துக்களே உள்ளன. ஒன்றிய அரசால் சுகாதாரம், கல்வி மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்களுக்கு போதுமான அளவு செலவு செய்ய முடியாததால்தான், தனி யார் மருத்துவமனைகள், கல்விநிலையங்கள் அதிகரித்துள்ளன. வருவாயை அதிகப்படுத்தவும், வரிவிதிப்பில் முற்போக்கான முறையையும், கோடீஸ்வர்களின் சொத்துக் களை முறைப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல்வி, சுகாதாரம், சமூகபாதுகாப்புக்கு அதிகமான அரசு நிதியை திருப்பிவிட வேண்டும். அப்போதுதான் சமூகத்தில் சமத்துவ மின்மையை குறைக்க முடியும், இந்த துறை களை தனியார்மயமாக்குவதையும் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது . இந்தியாவில் மிகப்பெரும் கோடீஸ்வரர் களுக்கு சொத்து வரியை மீண்டும் விதித்து, அல்லது புதிய வரியை விதித்து வருவாயைப் பெருக்க வேண்டும். அதன் மூலம் நாட்டின் கல்வி, சுகாதாரம், ஆகியவற்றில் முதலீடு செய்யலாம். இதற்காக கோடீஸ்வரர்களிடம் தற்காலிகமாக ஒரு சதவிகிதம் மட்டும் வரி மட்டும் விதிக்கலாம். இந்திய பெரும்பணக்கார்கள் பட்டியலில் கடைசி 10 இடங்களில் இருப்பவர்களின் சொத்துக்களின் மதிப்பில் பாதிக்கும் குறை வான தொகையைத்தான் ஒன்றிய அரசு தனது பட்ஜெட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுக்கு ஒதுக்குகிறது.

இந்தியாவில் உள்ள 100 பெரும்பணக் காரர்களின் சொத்துக்களை வைத்து, தேசிய கிராமப்புற வாழ்வாதார திட்டத்துக்கும், மகளிர் சுய உதவிக்குழுவுக்கும் அடுத்த 365 ஆண்டுகளுக்கு நிதியுதவி செய்ய முடியும். இந்தியாவில் 98 கோடீஸ்வர குடும்பங் களுக்கு 4 சதவிகிதம் சொத்துவரி விதித்தால், அடுத்த 2 ஆண்டுகளுக்கும் அதிகமாக ஒன்றிய சுகாதார குடும்பநலத்துறைக்கு நிதி வழங்க முடியும். இந்த 98 கோடீஸ்வர்களின் ஒட்டுமொத்த சொத்து மத்திய அரசின் பட்ஜெட் மதிப்பைவிட 41 சதவிகிதத்துக்கும் அதிகமாகும். கல்வியில் சமத்துவமின்மை குறித்து ஆய்வில், 98 கோடீஸ்வர்களின் மீது ஒரு சதவிகிதம் வரி விதித்தால், ஒன்றிய கல்வித்துறைக்கு தேவையான ஆண்டுச் செலவை சமாளிக்க முடியும். 4 சதவிகிதம் வரி விதித்தால், மதிய உணவுத் திட்டத்துக்கு தேவையான நிதியை அடுத்த 17 ஆண்டுகளுக்கு வழங்கலாம் என்று கூறுகிறது, அந்த ஆய்வு.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கட்டளை அரசாட்சி என்று அதற்குக் காரணம் கூறினால் அவைகளை சின்னாபின்னமாக்குங்கள். இனியும் இந்தப் புரட்டு நடக்காது என்று சொல்லுங்கள்" என்று முழக்கமிட்டார். (ஈரோடு ஆதி திராவிடர்கள் வரவேற்பு - குடிஅரசு 4.12.1932)

அப்படிப் பேசிய பெரியார், அதே மாநாடுகளில் தங்கள் ஜாதிக்கு பெருமை தேடவும் அதற்குப் புராணங்களில் ஆதாரங்களைத் தேடவும் முயலாதீர்கள் என்று எச்சரித்தார். அப்படிப் பெருமை பேசியவர்களை அவர்கள் மாநாடுகளிலேயே நேரடியாகவே கண்டித்தார்.

கிறிஸ்துவ மதம் மாறிய பிறகும் தீண்டாமை, ஜாதி ஒழியாத நிலையில் ஆதி திராவிட கிறிஸ்துவர்கள் மாநாட்டில் பேசிய பெரியார், "மதக் கட்டளையையும் கடவுள் நம்பிக்கையையும் கொண்ட அடிமை - ஒரு தாழ்ந்த ஜாதிக்காரன் ஒரு நாளும் விடுதலை அடையவே முடியாது" என்று கூறி, 'கிறித்துவத்தின் பரலோக இராஜ்யம்' ஒரு போதும் விடுதலை வாங்கித் தராது என்று பேசினார்.

தீண்டாமைக் கொடுமையிலிருந்து விடுவித்துக் கொள்ள வெளிநாடுகளுக்குப் போய் விடுங்கள்; அல்லது இஸ்லாம் மதத்தில் சேருங்கள் என்ற யோசனைகளை முன் வைத்த பெரியார், இஸ்லாம் திணித்த பெண்ணடிமை சடங்குகள் கிறிஸ்துவ தேர்பவனி, சந்தனக் கூடு, 'ஹலால்' ஆடு வெட்டும் முறைகளை கண்டிக்கத் தவறியதே இல்லை.

1920களில் தொடங்கப்பட்ட ஜாதி சங்கத்தின் நோக்கங்களும் இப்போது ஜாதி சங்கங்களின் நோக்கங்களும் முற்றிலும் முரண்பட்டதாகவே இருக்கிறது.

**ஜாதி இன்று புதிய வடிவங்களை எடுத்திருக்கிறது. ஜாதி ஒழிப்பு, வறுமை ஒழிப்பு என்பது முழுமையான சாத்தியமா? என்ற கேள்விகளை எழுப்புகிறார்கள். ஜாதி ஒழிப்புக்கான முதல் நிலையாக 'ஜாதிகளுக்குள் சமத்துவம்' என்ற இலக்கை எட்ட வேண்டியிருக்கிறது. சமூக நீதி கோட்பாடுகள், அரசின் சமூக நலத் திட்டங்கள், வன்கொடுமை சட்டங்கள், மக்களிடையே பிரச்சாரங்கள் இதற்கு துணை நிற்கின்றன. ஆனாலும் இந்தக் கோட்பாடுகளையும் சட்டங்களையும் உதவிகளையும் பயன்படுத்திக் கொண்டே இறுகிப் போய் நிற்கிறது. மிகச் சிறிய அளவில் தளர்த்திருக்கிறது என்று கூறலாம். ஜாதிப் பிடிவாதம் சமூகப் பண்பாடாக மாறிக் கிடக்கிறது. இரண்டாவது கட்டமாக, ஜாதிகளின் பெருமிதத்தை உடைத்து ஜாதிகளின் 'உள்ளடக்க மதிப்பீடுகளைஇல்லாது ஒழித்தல், காதல் வழிப்பட்ட ஜாதி மறுப்புத் திருமணங்கள் - பெண்ணியக் கோட்பாடுகள், நகர்ப்புற வாழ்க்கை, உயர்கல்வி போன்ற அம்சங்கள் ஜாதி இறுக்கத்தைக் குலைப்பதற்கு உதவுகின்றன. ஆனாலும் சமூகத்தின் பொதுச் சிந்தனையாக இது மாற்றப்படாமல் திட்டமிட்டு 'ஜாதிய வாதிகளால்' தடுக்கப்பட்டே வருகிறது.**

ஜாதியக் கட்டமைப்பு, கிராமங்களில் 'இறுக்கம்' கலையாமல் நிலை பெற்று நிற்பதற்குக் காரணம், ஜாதி - 'சமூகமாக உறவுகளாக' தன்னை நிலைப்படுத்திக் கொண்டிருப்பதும் சமூக உறுப்பினர்களின் மதிப்பீடுகளை நிர்ணயிக்கும் உரிமையை தனது அதிகாரப் பிடிக்குள் வைத்திருப்பதும் தான். மகனோ, மகளோ விரும்புகிற வேறு ஜாதிக்காரரை மணம் முடிக்க பெற்றோர் விரும்பினாலும், 'ஜாதி சமூகம்' தன்னை 'அவமதிக்கும்' என்ற உளவியலும் ஜாதியைக் காப்பாற்றுவதால், கிடைக்கும் 'மரியாதை'யும் ஆணவக் கொலை வரை தூண்டி விடுகிறது.

இந்த 'சமூக ஜாதி'யத்தைக் தகர்க்க ஒவ்வொரு ஜாதியிலிருந்தும் ஜாதி எதிர்ப்பாளர்கள் வெளியே வந்து சுய ஜாதி எதிர்ப்பாளர்களாக மாற வேண்டும் என்ற கருத்தை ஆழமாக பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. 'வன்னிய ஜாதி எதிர்ப்பு வன்னியர் சங்கம்; கவுண்டர் ஜாதி எதிர்ப்பு கவுண்டர் சங்கம்; நாடார் ஜாதி எதிர்ப்பு நாடார் சங்கம்' போன்ற அமைப்புகள் கட்டமைக்கப்பட வேண்டிய வரலாற்றுத் தேவை உருவாக்கியிருப்பதாகவே நான் உணருகிறேன். இந்த ஆலோசனையை ஜாதி எதிர்ப்பு இயக்கங்களின் விவாதத்துக்கு முன் வைக்கிறேன். அதாவது சுயஜாதி மறுப்பு அணி, ஜாதி அடையாளத்துடனேயே களமிறங்க வேண்டும்.

ஜாதியத்தை இறுக்கிப் பிடித்து வந்திருப்பது - தேர்தல்; வாக்கு வங்கி அரசியல். நவீன 'இந்து மத'மாக மாறி ஜாதி வாக்காளர்களை ஜாதி அடிப்படையில் தேர்தல் அரசியல் ஒன்று திரட்டிக் கொண்டே நிற்கிறது. இதற்கு இப்போதுள்ள தேர்தல் விதிமுறைகளில் உரிய திருத்தங்கள் கொண்டு வருவது குறித்து பரிசீலிக்கலாம். பெரும்பாலான ஜாதி வேட்பாளர்களை அந்தத் தொகுதியில் நிறுத்துவதற்கு தடை போட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து இயக்கங்களை நடத்தலாமா என்பது குறித்தும் நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

மூன்றாவதாகத் 'தமிழ் திருமணப் பதிவு மய்யம்' என்று பெயர் வைத்துக் கொண்டு ஒவ்வொரு ஜாதிக்கும் தனித்தனி மய்யங்களை நடத்தி, தொலைக்காட்சிகளில் விளம்பரங்கள் செய்கிறார்கள். இந்தப் போக்கை எதிர்த்து கடுமையான கண்டனக் குரல்களை எழுப்ப வேண்டும்.

ஜாதி ஆணவப் படுகொலை குற்றத்துக்கு உள்ளாகி, தண்டிக்கப்பட்ட குடும்பங்கள், ஜாதி வன்முறையில் தண்டிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் இடஒதுக்கீடு உரிமைகளைக் கோர முடியாது என்ற திருத்தம் பற்றியும் ஆலோசிக்கலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஜாதியக் கட்டமைப்பு மனிதத்துக்கு எதிரானது. அதை வலியுறுத்தும் மதம், கடவுள், சாஸ்திரம், சடங்குகளை விளக்கும் பரப்புரைகளை மக்களிடம் கொண்டு செல்வது மிக மிக அவசியம். குறிப்பாக ஆண்களைவிட பெண்கள் இந்த இயக்கத்தை முன்னெடுக்கும்போது அதன் வீச்சும் தாக்கமும் மிக மிக வலிமையாக இருக்கும் என்றே கருதுகிறேன். தீண்டாமை ஒழிப்பு என்ற நிலையிலிருந்து ஜாதி எதிர்ப்பு இயக்கங்கள் வலிமை பெற்றாக வேண்டும்.

**'அணையா வெண்மணி' டிசம் – 2021**

**வாசகர்களுக்கு...**

வரும் வாரத்திலிருந்து 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழ் சந்தாவைப் புதுப்பித்தவர்களுக்கு மட்டும் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். **– நிர்வாகி, 'புரட்சிப் பெரியார் முழக்கம்'**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 20th January 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN